# மு.இராமசுவாமியின் தோற்பாவை நிழற்கூத்து: பார்வையும் பழகலும்

# Mu.Ramasuwamiyin ThoRpaavai NizhaRkuuththu: Parvaium Pazhagalum

**முனைவர் சே.முனியசாமி,** தமிழ் உதவிப்பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை-625004

**Dr.S.Muniyasamy,** Assistant Professor Of Tamil, Mannar Thirumalai Naicker College Madurai, 625004

ORCiD: https://orcid.org/0009-0001-0619-3427

**DOI : 10.5281/zenodo.12788891**

**Abstract**

In the emerging world of science, one of the endangered folk arts is dholakutu. Theaters with modern facilities with technological development, producers who spend crores of rupees, safe facilities while acting, photography equipment with sophisticated equipment, musical instruments that emit music delicately, devices that bring light and sound precisely to the audience, dupe many times and choose one in a hundred and finally choose the favorite. Cinema is currently flying the flag in the world and in India with its various genres. Even if there is no talent or acting, if there is money, it is advertised and marketed and the stage is staged here from time to time to celebrate the success. In the midst of these, there are artists who rely on art for a living, and real artists who do not expect huge sums of money through art and can perform it with the attitude that art is enough to live, are also living here. Folk art is the father of arts. It contains various elements and amazing surprises. One such folk art is one that calls out to Dholapa. This article is an introduction to M. Iramaswamy's Thopava Nizhalkuthu and analyzes and explains the messages mentioned in it. This book was published by Madurai Kamarasar University Publishing Department in 1983 and authored by M. Ramaswamy. This 280-page book presents a complete understanding and explanation of Dholavai Nilayakutu.

**ஆய்வுச்சுருக்கம்**

வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில், அழிந்து வரும் நாட்டுப்புறக்கலைகளில் ஒன்று தோற்பாவை நிழற்கூத்து. தொழிநுட்ப வளர்ச்சியுடன் நவீன வசதி கொண்ட திரையரங்குகள், கோடிகளைக் கொட்டித் திரைப்படம் எடுக்கும் தயாரிப்பாளர்கள், நடிக்கும்போது பாதுகாப்பான வசதிகள், அதிநவீன கருவிகள் கொண்ட புகைப்படக் கருவிகள், இசையை நுட்பமாய் வெளியேற்றும் இசைக் கருவிகள், ஒளி, ஒலிகளை ரசிகர்களுக்குத் துல்லியமாகக் கொண்டு சேர்க்கும் சாதனங்கள், பல முறை டூப்பு போட்டு நூற்றில் ஒன்றைத் தேர்வு செய்து இறுதியாக பிடித்தைத் தேர்வு செய்தல் எனப் பல்வகையான செவுரியங்களுடன் உலகளவிலும், இந்திய அளவிலும் சினிமா தற்போது கொடி கட்டி பறக்கின்றது. திறமையோ, நடிப்போ இல்லாவிடினும் பணமிருந்தால் அதை விளம்பரமயமாக்கி, சந்தைப்படுத்தி வெற்றி விழா கொண்டாடும் நிலை அவ்வப்போது இங்கே அரங்கேற்றப்படுவதுண்டு. இவற்றிக்கு நடுவில் கலைகளை நம்பி அண்டிப் பிழைக்கின்ற கலைஞர்கள், கலையின் வாயிலாக பெருந்தொகைகளை எதிர்பாராது, கலை வாழ்ந்தாலே போதும் எனும் மனப்போக்கில் அவற்றை நிகழ்த்திக் காட்டக்கூடிய உண்மையான கலைஞர்களும் இங்கே வாழ்ந்தும் வருகின்றனர்.

கலைகளின் பிதாமகன் நாட்டுப்புறக் கலையே. இதனுள் பல்வேறு கூறுகளும், வியக்கத்தக்க ஆச்சரியங்களும் பொதிந்து கிடைக்கின்றன. அப்படிப்பட்ட நாட்டுப்புறக்கலைகளில் தோற்பாவைக் கூத்தும் ஒன்று. மு.இராமசுவாமியின் தோற்பாவை நிழற்கூத்து எனும் நூலை அறிமுகம் செய்து அவற்றில் குறிப்பிடும் செய்திகளைத் திறனாய்வு செய்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

1983 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பதிப்புத்துறையில் வெளிவந்த இந்நூலை எழுதியவர் மு. இராமசுவாமி. 280 பக்கங்கள் கொண்ட இந்நூல் தோற்பாவை நிழற்கூத்து பற்றிய முழுமையான புரிதலையும், விளக்கத்தையும் முன்வைக்கின்றது.

**நூலாசிரியர்**

மு.இராமசுவாமி நிஜ நாடக இயக்கத்தை முன்னெடுத்து நடத்திக் கொண்டிருக்கும் நாடகச் செயற்பாட்டாளர். 4.12.1951 ஆம் ஆண்டு பிறந்த இவர், எழுத்தாளர், நாடகக் கலைஞர், திறனாய்வாளர், நடிகர் எனப் பன்முகத் திறன் கொண்டவர். பள்ளி மற்றும் கல்லூரி படிப்பினை பாளையங்கோட்டையிலும், முனைவர் பட்ட ஆய்வினை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு நிறைவு செய்து பல்வேறு வகையான ஆய்வுகளையும், நாடகங்களையும் அரங்கேற்றி ஊரெல்லாம் வலம் வருகின்றார். தமிழ்ப் பல்கலைக்கழத்தில் நாடகத் துறைக்கு உயிர்கொடுத்த இவர் 'கூத்துக்களரி' எனும் கல்வித்திட்டத்தை உருவாக்கி இன்று வரையிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. கே.டி, சண்டக்கோழி, ஜோக்கர், கிடா, சங்கரன் கோவில், பருத்திவீரன், பிதாமகன், கன்னத்தில் முத்தமிட்டாள், நந்தா, மாயன், தேவதை ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

**நூல் அமைப்பு முறை**

தோற்பாவை நிழற்கூத்தினைப் பற்றி விரிவாகவும், நுட்பமாகவும் எடுத்துரைக்கும் நூலாக அமைந்துள்ளது. இந்நூலானது முன்னுரை, அறிமுகத்தைத் தொடர்ந்து இந்நூலானது, தோற்பாவை நிழற்கூத்து அறிமுகம் கலைஞர்கள், தோற்பாவை நிழற்கூத்து கலைஞர் வாழ்க்கை, தோற்பாவை நிழற்கூத்து கலைஞர்கள், தோற்பாவை நிழற்கூத்து தோற்பாவைகள், தோற்பாவை நிழற்கூத்து அமைப்பு முறை, தோற்பாவை நிழற்கூத்து பார்வையாளர் பங்கு பெறல், தோற்பாவை நிழற்கூத்தின் தற்கால நிலையும் இனிச் செய்ய வேண்டியது என்ன என்பதோடு, துணைநூற்பட்டியல், பின்னிணைப்புகள், புகைப்படங்கள் போன்ற தலைப்புகளைப் பெற்று இந்நூல் விளக்கி நிற்கின்றது.

**1.தோற்பாவை நிழற்கூத்து (Leather Shadow Puppet Show)**

**'சீலமின்றி நோன்பின்றிச்**

**செறிவே இன்றி அறிவின்றித்**

**தோலின் பாவைக்கூத்தாட்டாய்ச்**

**சுழன்று விழுந்து கிடப்பேனை'** (http://arundhtamil.blogspot.com/2012/09/)

எனும் பாடலடிகள்தான் தோற்பாவை நிழற்கூத்து பற்றி தமிழிலக்கியத்தில் கிடைக்கும் முதல் சான்று பாடலாகும். இவற்றைப் பற்றி முழுமையான ஆராய்ச்சிகளையும், கள ஆய்வுத் தரவுகளுடன் இந்நூல் சுமந்து நிற்கின்றது.

இந்நூலின் முதலில் தோற்பாவை நிழற்கூத்து எனும் தலைப்பில், தோற்பாவை நிழற்கூத்து பற்றிய அறிமுக விளக்கமும், அதற்கான பெயர்ப் பொருத்தமும், அந்தக் கலைகளின்

பூர்வீகத்தையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அடியார்க்கு நல்லார் தம் உரையில் 'எழுவகைக் கூத்து மிழி குலத்தோரை, ஆட வகுத்தன னகத்தியன்றானே' என்பதில் தோற்பாவை நிழற்கூத்தையும் முனவைக்கின்றார். உ.வே. சாமிநாதையர், டி.கே.சண்முகம், ஆர்.ராஜகோபால் ஆகிய அறிஞர்கள் சுட்டிய நிழற்கூத்தின் கருத்துக்களை முன்வைக்கின்றார். பாவைக்கூத்து என்பதற்கான பெயர்க் குழப்பங்கள் ஏற்பட்ட நிலையினையும், அவற்றைத் தெளிவுறுத்தும்படி, சோமலெ, எஸ்.எம்.எல்.செட்டியார், ஜெ.திலகரி, அ.இராகவன் ஆகியோரின் விளக்கங்களையும், கழகத் தமிழ் அகராதி மற்றும் என்சைக்ளோபீடியா போன்றவற்றில் காணலாகும் குறிப்புகளையும், இந்தோனேசியா, ஜாவா போன்ற நாடுகளில் இக்கூத்து பற்றியச் சொல்லாடல்களை முன்வைத்து தோற்பாவை நிழற்கூத்து என்பதே பொருத்தமான பெயர் என்பதை சான்றுகளுடன் நிரூபித்துள்ளார். அதன் பின்பு தோற்பாவை நிழற்கூத்து பற்றியும், கூத்துநடைபெறும் நேரம், பாவைகள், அரங்கம், பாவையாட்டி, குழு, தொழில்முறைக் கூத்துக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

இந்தத் தோற்பாவை நிழற்கூத்தானது உலகில் இந்தியா, இந்தோனேசியா, திவாங்க், சீனா, மலேசியா, கம்போடியா, தாய்லாந்து, துருக்கி ஆகிய எட்டு நாடுகளில் நடத்தப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன. உலகளவில் பேசியதுமட்டுமின்றி, இந்தியாவில் இக்கூத்து தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, ஒரிஸா ஆகிய மாநிலங்களில் காணலாகும். கலைஞர்கள், கூத்து நிகழும் இடம் பற்றி குறிப்பிட்டு, ஆந்திராவில் அரசு உதவிடனும், கேரளாவில் கோயில்களின் ஆதரவுடனும் இக்கலை இயங்கி வந்திடினும், தமிழகத்தில் மட்டும் இக்கலை கிராம மக்களைச் சார்ந்து வாழ்ந்து வருகின்றது.

ஆந்திராவில் இக்கூத்தைத் தோலு பொம்மலாட்டா (Tholu Bommalata), சென்னையில் தோல் பொம்மலாட்டம், மைசூரில் தொகலு பொம்பே ஆடா (Thogalu Bombe ata), அல்லது சக்கல கொம்பே ஆடா (Chakkala Gombe ata), கேரளாவில் தோற்பாவைக் கூத்து, நிழற்காட்சி, ஓலப்பாவைக் கூத்து, ஒரிஸாவில் ராவன் சாயா (Ravan Chaya), மகாராட்டிரத்தில் சர்மபகுலி நாட்யா (Charma Bhaguli natya) என்ற பெயர்களில் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாநிலங்களுக்குரிய கூத்துத் தொடர்புடைய இலக்கியச் சான்றுகளுடனும், வரலாற்றுச் சான்றுகளுடனுடம் முதல் பகுதி அமைந்துள்ளது.

**2. கலைஞர் வாழ்க்கை**

இந்தப் பகுதியில் கலைஞர்களின் வாழ்வியலை எடுத்தியம்புகிறது. சரபோஜி மன்னரின் ஆதரவு இக்கலைஞர்களுக்கு பெரிதும் உதவியாக இருந்ததால் செழித்தோங்கியது. அதன் பின்னர் ஆதரவின்றி ஊர் ஊராய்ச் சென்று கலைகளை நிகழ்த்தியுள்ளனர்.

இக்கலை சிறப்பாக நடத்தி வந்ததற்கு மூன்று காரணங்களாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் ஆதிக்கம், இக்கலைஞர்களோடு கலாச்சார பாரம்பரிய ரீதியில் ஒன்றுபட்ட மராட்டிய இனத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்தது. (தோற்பாவை நிழற்கூத்து, ப.177)

மன்னரின் பொருளாதார ரீதியிலான முழுப் பாதுகாப்பும் இக்கலைஞர்களுக்கு இருந்தது. (20. மேலது, ப.177)

சமூக நிலையிலும் இவர்களின் இடம் மராட்டிய பரம்பரையுடன் இணைக்கப்பட்டது. (மேலது, ப,177)

இவர்களது சாதிப்பிரிவுகள், பெரு, சிறு தெய்வ வழிபாடு பற்றியும் திருமணச் சடங்குகள்

பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக திருமண விழாவின் ஏற்பாடுகளையும் பெண்கேட்டு நிச்சயம் செய்தல், உறவினர் அழைப்பு, மணச்சடங்கு, திருமண விருந்து, மறு விருந்து, கலப்பு மணம், மண முறிவு, மகப்பேறு போன்ற நிகழ்வுகளும், குழந்தை பிறந்த பின் பெயர் வைத்தல், பூப்பெய்தல், சாவுச் சடங்கு, முதலியவற்றை நுணுக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவர்களது பொருளாதார நிலையானது மிகவும் பின் தங்கியேக் காணப்பட்டுள்ளது. அன்றன்றைக்கான உணவுப்பொருட்கள்கூட தினமும் வாங்கி சமைத்து பசியமருவார்கள். தோற்பாவைகளைச் செய்வதற்குக்கூட முடியாநிலை. ஆட்டுத்தோளின் விலையேற்றத்தினால் பாவைகள் செய்ய முடியாமல் தங்களது கதைகளைச் சுருக்கி வாழ்வு நடத்தும் நிலையும் அரங்கேறியுள்ளது. குறைந்த வருமானம் வருவதால் பிழைப்பு நடத்த சிக்கலாயிருப்பதால் அவர்களது பெண்கள் விபச்சாரத் தொழில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது. அதே போல் கள், சாராயம் குடித்தல், வெற்றிலைப் போடுதல் போன்ற பழக்க வழக்கங்களைக் கடைபிடித்துள்ளனர்.

### 3. கலைஞர்கள்

இந்தக் கூத்தினை நிகழ்த்தும் கலைஞர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று தங்களது வாழ்வியலை நடத்தி வந்துள்ளனர். குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் இக்கலைத் தொடர்பான அனைத்து வேலையும் செய்துள்ளனர். “தமிழகத்தைப் பொறுத்தவரையும் இன்று தோற்பாவை நிழற்கூத்து நடத்திக் கொண்டிருக்கின்ற அத்தனை குழுவினருமே மராட்டியத் தமிழர்களாக (Maharashtras cum Tamils) இருக்கின்றனர்” (தோற்பாவை நிழற்கூத்து, ப.175) என மு.இராமசுவாமி குறிப்பிடுகின்றார். மேலும், “தமிழகத்தையும், ஆந்திரத்தையும், கர்நாடாகத்தையும் பொறுத்தவரை இக்கலைக்கு உயிரூட்டிக் கொண்டிருப்பவர்கள் மராட்டிய ராவ்ஜிக்கள்” (மேலது, ப.175) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோற்பாவை நிழற்கூத்திலுள்ள தொழில்களுக்கு கலைஞர், துணைக்கலைஞர்கள், பணியாளர்கள் (பாவையாட்டி, சுரப்பெட்டி இசைப்பவர், மத்தளம் இசைப்பவர், ஜால்ரா இசைப்பவர், அனுமதிச் சீட்டு வழங்குபவர், உள்ளே அனுமதிப்பவர், அறிவிப்பாளர்-விளம்பரதாரர்) எனப் பல நிலைகளில் கலைஞர்கள் காணுகின்றனர். அதே போல் நாடகாசிரியர், நடிகர், பாடகர், இசைஞர், இயக்குநர், ஓவியர், நிர்வாகி, நிதியாளர் எனப் பல்வேறு வகையான கலைஞர்களின் பொறுப்பும், கடமையும் தோற்பாவை நிழற்கூத்திற்கு முக்கியமாக அமைகின்றது.

### 4. தோற்பாவைகள்

தோலில் செய்யப்படுவதன் வாயிலாக தோற்பாவைகள் உருவாக்கப்பட்டன. காலப்போக்கில் தோலின் விலையேற்றத்தினாலும், கூத்துக்கலைகளை புறந்தள்ளிதனாலும் வருமானம் குறைவு ஏற்படுகின்றது. இதனால் கனத்த தாள்களில் படங்களை வரைந்து பயன்படுத்தியுள்ளனர். முருகன் குழுவிலுள்ள தோற்பாவைகளைப் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளனர். தோலாலானவைகளை உயிருள்ள பாத்திரங்கள், உயிரற்ற ஜோடனைகள், குல அடிப்படையில் வண்ணம் போன்றவைகள் காணப்படுகின்றன.

### 5. அமைப்பு முறை

இந்தக் கூத்தில் எட்டுவகையான சிறு கூறுகளின் பிணைப்புகளைக் காண முடிகிறது. கடவுள் வாழ்த்து, கோமாளி தன்னை அறிமுகப்படுத்தல், கூத்து அறிமுகம், நகைச்சுவைக் காட்சி, கதை ஆரம்பப் பாடல், கதை நிகழ்ச்சி, நகைச்சுவைக் காட்சி, கதை முடிவு என்பன.

இச்சிறுகூறுகளைத் தொகுத்துக் காணும்போது கடவுள் வாழ்த்து, கூத்துத் தொடக்கம், கதைப்பகுதி, முடிவு என நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**6. பார்வையாளர் பங்கு பெறல்**

எந்த வகைக் கூத்து அரங்கேறினாலும் அவற்றைக் கண்டு அகமகிழ்வதற்கு பார்வையாளர்கள் முக்கியம். பார்வையாளர்கள் இல்லையெனில் எந்தக் கூத்தும் உயிர்பெறாது. எப்படி கூத்துவிற்கு கலைஞர்கள் உயிர் என்றால், பார்வையாளர்கள் உடலாக எண்ணப்படுவர். இந்தப் பார்வையாளர்களின் இயல்புகளை மிகத் துல்லியமாக மு.இராமசுவாமி முன்வைத்துள்ளார். பார்வையாளர்களின் குணநலன்களை விளக்க முற்படுகையில் நான்கு வகை நிலைகளை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- சொந்த மனப்பாங்கு உடையவராகவும்
- உணர்ச்சிக்கு அடிமைப்பட்டவராயும்
- மாயையென்று தெரிந்தபோதிலும் நம்புவதற்கு ஒத்துப் போக விரும்புபவராயும்
- அந்த நம்பிக்கையின் அடிப்படையில் செயல்பாட்டிற்கான வழியைத் தேடாதவராயும் இருப்பர்
- இறுதியாக பார்வையாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், அவர்கள் பங்கு பெறுகின்ற தன்மையின் அடிப்படையிலும் கூத்து கலை வடிவம் பெறும்.

**7. தோற்பாவை நிழற்கூத்தின் தற்கால நிலையும் இனிச் செய்ய வேண்டியதும்**

அழிந்துவரும் கலைகளில் தோற்பாவைக் கூத்தும் ஒன்று. முன்பெல்லாம் சுவரொட்டிகளில், துண்டு பிரசுரங்களில், மரங்களில் மீது விளம்பரப்பலகை எனப் பல்வேறு வகைகளில் நாட்டுப்புறக் கலை சார்ந்த அரங்கேற்ற நிகழ்வுகளில் காண நேரிடும். ஆனால், இன்றைய நிலையில் இதுபோன்ற கலைகளின் விளம்பரத்தைப் பார்க்கவே அரிதாக உள்ளது.

மன்னர் காலத்தில் முழு ஆதரவையும் பெற்ற இக்கலையானது, வெள்ளையர்களின் ஆட்சிகாலத்தில் கலைஞர்கள் தங்களது சொத்துக்களை இழந்து நின்றனர். அரசியல் மாற்றங்கொண்டதால் இவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டதால் கூத்துகலையின் நிலை பரிதாபக்குரியதானது. எனவே சமுக மதிப்பு பெற்ற இவர்கள் தங்கள் வாழ்ந்த இடங்களில் நற்பெயர் குறைந்து கொண்டே வந்ததின் விளைவாக அறிமுகமில்லா பிற கிராமங்களுக்குச் செல்லும் நிலை கிட்டியது.

பிற கலைகள் வசதி வாய்ப்புகளுடன் செய்வதாலும், தோற்பாவை நிழற்கூத்துக்கலையானது மிகக் குறைந்த வசதிகளுடன் அரங்கேற்றுப்பட்டு வந்தது. விளம்பரங்கள் செய்ய போதிய பணமில்லை. வர்த்தக அடிப்படையில் போட்டியுடன் அனைத்தும் விளம்பரமாய்த் திகழும் இக்காலத்தில் தோற்பாவை நிழற்கூத்துக்கு தக்க விளம்பரமும், பணபலமும் இல்லாமையால் செல்வாக்கு பெற வில்லை. அதே போல் திரைப்பட மோகம் மக்களிடையேப் பெருகிவிட்டது எனக் கூறத் துணியலாம். திரைப்படங்கள் மெல்ல மெல்ல பிரபலமாகி செல்வாக்கு அடைந்து ரசிகர்களின் பார்வைக்கும், கண்ணிற்கும் விருந்தளிப்பதால் ரசிகர்களின் மனம் திரைப்படத்திலேயே மூழ்கி கிடைக்கின்றனர். இந்த நிலை புதிய வரவாயிருந்தாலும் நாட்டுப்புறக்கலைகளின் அழிவிற்கு வித்தாக அமைகின்றது. தோற்பாவைநிகழ்வு கூத்துவானது பழைய கதைகளைப் பெற்று காண்பிக்கப்படுவதால் புதுமையில்லாமல் அமைகின்றது. புதுமையை விரும்பும் ரசிகர்

விரும்பிகளுக்கு இது சோர்வினை அளிக்கின்றது. அதே போல் ரசிகர்களை ஈர்ப்பதற்காக இரட்டை அர்த்தங்களையும், பாலுணர்ச்சி போன்ற காட்சிகள் இதில் இடபெறாமையைக் கவனிக்கப்பட்டு மனிதன் புலம்பெயர்ந்து போவது போல, நாட்டுப்புறக்கூத்துகளிருந்து திரைப்படத்திற்குப் புலம்பெயர்ந்து செல்கின்றனர். "இத்தோற்பாவை நிழற்கூத்தின் இன்றைய நிலை இருட்டாகவே இருக்கிறது. இனி அதை உயிர்பிக்க அதன் ஆன்மாவில் கை வைக்காமல் அதன் பிரதானத்தை அறிந்து அதை உயிப்பிக்க வேண்டும். இதையும் கற்றவர்கள் உண்டாக்கித் தரவேண்டும்" ( தோற்பாவை நிழற்கூத்து, ப.192) என மு.இராமசுவாமி குறிப்பிடுகின்றார்.

**கள ஆய்வில் உதவிய தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்கள்**

அருணாசலராவ்- பாசிங்காபுரம், சமப்ந்தர் ஆலங்குளம், கடச்சனேந்தல், கருப்பையாராவ்- பெருங்குடி, ஆனையூர், காளவாசல், விளாங்குடி, கொக்குளம், கருமாத்தூர், கருப்பையாராவ் (ட்யூப்ராவ் மகன்) காப்பிலியப்பட்டி (திண்டுக்கல்), கோபால்ராவ்- நிலையூர், துரைராஜ்ராவ்- மாசிலாமணிபுரம் (தூத்துக்குடி), பாபுராவ்- நரசிங்கம், மங்களக்குடி, புதுப்பட்டி, வெளவால் தோட்டம், மலையாளத்தான் பட்டி, அருமபனூர், புதூர், பாபுராவ் (ட்யூப்ராவ் மகன்)- ஆரோக்கியசாமி நகர், மாரியப்பராவ்- மெட்டுக்குண்டு (விருதுநகர்), இராசுராவ்- திருமோகூர், நடுமுதலைக்குளம், சண்முகராவ்- நடுமுதலைக்குளம், சின்னச்சாமிராவ்- பெருங்குடி, நரசிங்கம், மங்களக்குடி, புதுப்பட்டி, முருகன்ராவ்- வண்டியூர், கடச்சனேந்தல், புளியங்குளம், பல்கலைநகர், வடபழஞ்சி, முத்துப்பட்டி, அச்சம்பத்து, விரகனூர் போன்ற கலைக்ஞர்களையும் ஊர்களையும் தெளிவுபடச் கொடுக்கப்பட்டுள்ளது.

**தோற்பாவை நிழற்கூத்து புகைப்படங்கள்**

இந்நூலில், தோற்பாவை நிழற்கூத்து தொடர்புடைய 35 வகையான புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கூத்தரங்கு, பெட்ரோமாக்ஸ் விளக்கின் ஒளியில் கூத்து நிகழும் இடம், துணைக்கலைஞர்கள், கேரளத்திலுள்ள கூத்து மாடம், விளக்கு வைக்கப்படும் மூங்கில் கழி, கூத்துமாடத்தின் உட்பகுதி, கூத்துமாடத்தின் வெளித்தோற்றம், அரங்கம், கூத்தரங்கம், பாவையாட்டியின் உட்புறத்தோற்றம், சீன நாட்டுத் தோற்பாவையின் தோற்றம், உச்சிக்குடும்பன் பாத்திரம், ராஜுராவ் சண்முகராவ் குழுவினர், கருப்பையா ராவ் குழுவினர், முருகன்ராவ் குழுவினர், டில்லி முத்தம்மா டான்ஸ், கையில் கட்டியிருக்கும் சலங்கை, காலில் கட்டியிருக்கும் கட்டை, பாவுரா என்ற இசைக்கருவி, பாவைகளுக்கு வண்ணம் தீட்டல், அடுத்த கிராமத்திற்கு ச் செல்லல், வெளியே அமர்ந்து இசைக்கின்றவர், அனுமதிச் சீட்டு பெருமிடம், விளம்பரம் செய்வோர், தாள் பாவை, கரக ஆட்டக்காரப் பாவை, விளம்பரம், மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முருகன் குழுவினர் கூத்து நிகழ்த்தியமை எனப் பல்வேறு புகைப்படங்கள் இந்நூலில் அமைத்து விளக்கப்பட்டுள்ளது.

**குறியீடும் புள்ளியலும்**

தோற்பாவை நிழற்கூத்து தொடர்பான வரைபடங்கள், குறியீடுகள், புள்ளியல் என 40 வகைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் தமிழ் ஆங்கில நூல்களுடன், இதழ்கள், ஆய்வுகள் போன்றவைகள் துணைநூற்பட்டியலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியாக சீதை சிறைப்பாடல்களின் கதை வசனங்கள் 20 பக்கங்களில் காணப்படுகின்றன.

இறுதியாக, 'தோற்பாவை நிழற்கூத்து' எனும் இந்நூலை, மு.இராமசுவாமி மிக நுட்பமாகவும், தக்க சான்றுகளுடனும், பல்வேறு களங்களுக்குச் சென்றும், பன்முகத் திறமை

கொண்ட கூத்துக் கலைஞர்களைக் கண்டறிந்து அலசி ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்.

இலையுதிர் காலத்தில் ஆலமரத்தின் இலைகள் ஒவ்வொன்றாக விழுந்து மரங்கள் ஆடையின்றி நிற்பதுபோல், நாட்டுப்புறக்கலைகளில், நாட்டுப்புறக் கலைஞர்களும் பருவத் திருவிழாவை நோக்கிக் காத்திருக்கின்றனர். நாட்டுப்புறக்கலைகள் என்பது பரந்த தளத்தைக் கொண்டது.நாட்டுப்புறக் கலைகளும், நாட்டுப்புறக் கலைஞர்களும் குறைந்து கொண்டேயிருக்கும் இக்காலத்தில் இது போன்ற கலைகளை இனி வரும் காலங்களில் அச்சுக்களிலும் காட்சிப்பொருளாகவும் மட்டுமே காணலாகும் சூழல் நிலவுகிறது. இன்றையச் சூழலில் நாட்டுப்புறக் கலைஞர்களின் வறுமையொருபுறமும், நாட்டுப்புற கலைகளுக்கான அங்கீகாரமின்மை மறுபுறமும் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன. கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளில் தன்மானத்தை முன்னிறுத்தி விவசாயிகளின் மரணம் நிகழ்ன்றதைப் போல, நாட்டுப்புறக் கலைஞர்களின் நிலையும் அவ்வாறே அங்காங்கே நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இனியாவது மிச்சமிருக்கும் கலைகளையும், கலைஞர்களையும் காப்பாற்ற வேண்டும் என்ற போர் கால நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தோற்பாவை நிழற்கூத்து கலையானது மக்களின் மனதிற்குள் ரத்தமும், சதையுமாய் உறைந்து கொண்டிருந்தன. தற்போது இந்தக் கலைகள் அழிந்து கொண்டு வருவது வேதனைக்குரியது.

**துணைநூற்பட்டியல்**


1. இராமசுவாமி.மு, தோற்பாவை நிழற்கூத்து, 1983 முதற்பதிப்பு, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
2. இராமசுவாமி.மு, நாடகம் நடிப்பு நெறியாளுகை ஒரு கூத்தாடிப் பேராசிரியரின் மனக் குதிரிலிருந்து.., 2014, புரட்சிக் கவிஞர் மன்றம், 75, வடக்குமாசி வீதி, மதுரை-1
3. https://www.researchgate.net/publication/336443494_nikalttukkalaikalil_pavaikkutta/fulltext/5da0bbab299bf116fe9eca2d/nikalttukkalaikalil-pavaikkutta.pdf
4. https://bookday.in/drama-flame-is-a-real-drama-directed-by-prof-mu-ramasamy/
5. https://labuwiki.com/mu-ramasamy/
6. http://arundhtamil.blogspot.com/2012/09/



**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் சே.முனியசாமி "மு.இராமசுவாமியின் தோற்பாவை நிழற்கூத்து: பார்வையும் பழகலும்** " புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 3, சூலை 2024, பக். 10-16

**Cite this Article in English**

**Dr.S.Muniyasamy " Mu.Ramasuwamiyin ThoRpaavai NizhaRkuuththu: Parvaium Pazhagalum**" Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 3, July 2024, pp. 10-16